**ஊவா மாகாணத்தில் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பின் 1 (அ) தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2023 (கட்டம் - II) துகைமைகளைப் பரிசீலிப்பதற்கான நேர்முக மற்றும் பிரயோகப் பரீட்சைக்கான அழைப்பு**

1. 2024.03.30 தினமன்று நடைபெற்ற மேற்குறித்த போட்டிப் பரீட்சை தேர்வு முடிவுகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு தகுதி பெற்ற விண்ணப்பதாரா்களின் பெயா் பட்டியல் இத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

2. ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு விடயத்திற்குமான வெற்றிட எண்ணிக்கையை விட மூன்று மடங்கு எழுத்துமூல பரீட்சையில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்களின் திறமை அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சை 2024.04.27 திகதி முதல் நடைபெறவுள்ளதுடன் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் கீழ் குறிப்பிட்ட ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின்போது முன்வைப்பதற்கு ஆயத்தப்படுத்திக் கொள்ளவும்.

3. இப் பெயர் பட்டியல் **பரிட்சை இலக்க** வரிசையின் அடிப்படையில் **தயாரிக்கப்பட்டுள்ளதே** தவிர எழுத்துமூல பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக **தகுதி வரிசையின்** அடிப்படையில் **தயாரிக்கப்படவில்லை** என்பதனை அறிவித்துக் கொள்கிறேன்.

4. நேர்முகப் பரீட்சையின்போது ஆட்சேர்ப்பு தகைமைகள் சரிபார்க்கப்பட்டு ஆட்சேர்ப்பு தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரி பிரயோகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்.

5. ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களின் அடிப்படையில் பிரயோகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படும். நேர்முகப்பரீட்சைக் குழுவிற்கு எழுத்துமூலப் பரீட்சையின் மதிப்பெண்கள் வழங்கப்படாததுடன் அது தொடர்பில் அவர்களுக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

6. எழுத்துப் போட்டித் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் பிரயோகப் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் தகுதி வரிசையில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் நியமனம் வழங்குவதற்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். (ஊனமுற்ற விண்ணப்பதாரர்கள் வெற்றிடங்களை நிரப்பும் போது பொது நிர்வாக சுற்றறிக்கை எண். 27/88 இன் விதிகளின்படி கையாளப்படுவார்கள்)

7. ஊவா மாகாண சபை பொதுச்சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள வெற்றிடமான பாடசாலைகளின் பட்டியலின்படி விண்ணப்பதாரர்கள் தாங்கள் நியமனம் செய்ய விரும்பும் பாடசாலைகளைக் குறிப்பிட்டு நேர்முகத் தேர்வின் போது சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு விருப்பமான பாடசாலை இல்லாத பட்சத்தில் மட்டுமே வெற்றிடப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு பாடசாலைக்கு நியமனம் வழங்கப்படும்.

8. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் திகதி மற்றும் நேரம் எதிர்வரும் நாட்களில் விண்ணப்பதாரர்களின் மின்னஞ்சலுக்கு அறிவிக்கப்படுவதோடு இந்த இணையத்தளத்திலும் வெளியிடப்படும்.

- கொண்டு வர வேண்டிய கடிதங்கள் மற்றும் ஆவணங்கள்

I. பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதி (நிழற்பிரதியுடன்)

II. தேசிய அடையாள அட்டை / செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம் / செல்லுபடியான கடவுச்சீட்டுப் பத்திரம் (நிழற்பிரதியுடன்)

III. க.பொ.த. (சா.தர) பரீட்சை சான்றிதழ்களின் மூலப் பிரதி (நிழற்பிரதியுடன்)

IV. க.பொ.த. (உ.தர) பரீட்சை சான்றிதழ்களின் மூலப் பிரதி (நிழற்பிரதியுடன்)

V. பட்டப்படிப்பு செல்லுபடியாகும் திகதியை குறிப்பிடும் பட்டப்படிப்பு சான்றிதழ் மற்றும் பட்டப்படிப்பு தொடர்பில் கற்ற பாடங்களின் தகவல் அடங்கிய சுவடிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ என்பவற்றின் மூலப் பிரதி (நிழற்பிரதியுடன்)

VI. கிராம சேவகரினால் வழங்கப்படும் வசிப்பிடம் மற்றும் நடத்தை பற்றிய சான்றிதழ் (டீ.எஸ்.4 படிவம்)

VII. 2021,2022,2023 ஆகிய வருடங்களுக்கான தேர்தல் பெயர் இடாப்பின் பிரதி
(கிராம சேவகர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட படிவத்திற்கேற்ப பூர்த்தி செய்து கொண்டு வரவும். ஊவா மாகாணத்தில் 03 வருடங்கள் முன் நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்த முடியாத விண்ணப்பதாரர்கள் தமது வாழ்க்கைத்துணை ஊவா மாகாணத்தில் தொடர்ந்து 03 வருடங்களாக நிரந்தரமாக வசிப்பவர் என்பதை உறுதிப்படுத்தும் வாக்காளர் பட்டியல் பிரதியையும் திருமண சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய விண்ணப்பதாரர்கள் 03 வருடங்களுக்கான தொடர்ச்சியான நிரந்தர வதிவினை கொண்டிராவிடினும் விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதியில் ஊவா மாகாணத்தில் தமது நிரந்தர வதிவினை நிரூபிக்க வேணடும்.)

VIII. கிராம சேவகர் சான்றிதழ் தவிர்ந்த கடந்த 06 மாத காலத்துக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட நடத்தை பற்றிய சான்றிதழ்கள் 02

IX. சான்றிதல்களில் பெயர் தொடர்பில் வேறுபாடுகள் (மாற்றங்கள்) காணப்படுமாயின் வாக்குமூல அறிக்கை

X. அரச சேவையிலுள்ள ஒருவராயின் திணைக்களத் தலைவரினால் வழங்கப்பட்ட சேவை சான்றிதல்

XI. மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் அதனை நிரூபிக்கும் வைத்திய சான்றிதல்

XII. நியமனம் பெறுவதற்கு விருப்பம் தெரிவிக்கும் வெற்றிடப் பாடசாலைகள் உள்ளடங்கிய படிவம்

XIII. படிவம்